சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M.முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

**MCOP.No.33/2024**

மனுதாரர் தரப்பு சாட்சி ம.சா.1 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. J. சரஸ்வதி, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

பெயர்: திருமதி. அமலின்மெர்ஸி (எ) மெர்ஸி த/பெ: சூசைமாணிக்கம்

வயது: ஊர் :

தொழில்: முகவரி:

தேதி: 08.07.2025 தாலுக்கா :

**முதல் விசாரணை…**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என் முதல் விசாரணையை எழுத்து மூலமாக முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

| வ. எண் | நாள் | ஆவணவிபரம் | ஆவணத் தன்மை | |
|---|---|---|---|---|
| 1 | 31.08.2023 | முதல் தகவல் அறிக்கை | ஆன்லைன் காப்பி | ம.சா.ஆ.1 |
| 2 | 29.08.2023 | விபத்து பதிவேடு அறிக்கை | ஆன்லைன் காப்பி | ம.சா.ஆ.2 |
| 3 | 27.10.2022 | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் வாகன பதிவு சான்று | ஆன்லைன் காப்பி | ம.சா.ஆ.3 |
| 4 | 22.10.2022 | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடு பாலிசி | ஆன்லைன் காப்பி | ம.சா.ஆ.4 |
| 5 | 04.09.2023 | 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் வாகன ஆய்வு சான்று | ஆன்லைன் காப்பி | ம.சா.ஆ.5 |
| 6 | 30.08.2023 | மெடிக்கோ லீகல் ஒப்பீனியன் | ஆன்லைன் காப்பி | ம.சா.ஆ.6 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | -- | எனது வங்கி கணக்கு புத்தகம் | ஜெராக்ஸ் நகல் | ம.சா.ஆ.7 |
| 8 | -- | அக்கவுண்ட் ஸ்டேட்மெண்ட் | ஆன்லைன் காப்பி | ம.சா.ஆ.8 |
| 9 | 02.05.2012 | கல்வி மாற்று மற்றும் நன்னடத்தை சான்று | ஜெராக்ஸ் நகல் | ம.சா.ஆ.9 |
| 10 | 01.09.2023 | டிஸ்சார்ஜ் சம்மரி | நகல் | ம.சா.ஆ.10 |
| 11 | -- | மருத்துவ பில்கள் எண்ணிக்கை - 3 | அசல் | ம.சா.ஆ.11 |
| 12 | 08.02.2013 | கல்வி பட்டச்சான்று | ஜெராக்ஸ் நகல் | ம.சா.ஆ.12 |
| 13 | -- | வாக்காளர் அடையாள அட்டை | ஜெராக்ஸ் நகல் | ம.சா.ஆ.13 |

**1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் பின்னால் அமர்ந்து சென்ற வாகனம் Honda Activa இருசக்கர வகனம் என்றால் சரிதான். நான் பின்னால் அமர்ந்து சென்ற இரு சக்கர வாகனத்திற்கு வாகனத்தை ஓட்டிச்சென்ற தமிழரசியின் கணவர் பெயரில் உரிமம் உள்ளது. அந்த இரு சக்கர வாகனம் எந்த Insurance company ல் Insurance செய்யப்பட்டது என்று எனக்கு தெரியவில்லை. இரு சக்கர வாகனத்தின் உரிமையாளரின் காப்பிடு நிறுவனத்ததை தரப்பினராக சேர்க்க படவில்லை என்றால் சரிதான். உரிய தரப்பினரை சேர்க்காதாதால் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்பது சரியல்ல. இருச்சக்கர வாகனத்தை ஓட்டிச் சென்ற தமிழரசியின் கவனக்குறைவால் தான் விபத்து எற்பட்டது என்றால் சரியல்ல. தமிழரசியின் ஒட்டூநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. தமிழரசி இருசக்கர வாகனத்தை ஒட்ட தெரியாமல் ஒட்டி சென்று பதட்டத்தில் விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. எனக்கு எற்பட்ட காயங்கள் சொற்ப காயங்கள் என்றும் வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்றால் 2 ம் எதிர்மனுதாரர் மட்டுமே கொடுக்க கடமைப்பட்டுள்ளர் என்றாலும் 1 ம் எதிர்மனுதாரர் கடமை பட்டவர் இல்லை என்றால் சரியல்ல.

**2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் ஒப்பந்தத்தின்அடிப்படையில் மாத சம்பளம் பெற்றுவருகிறேன் என்றால் சரிதான். நான் ஒப்பந்த பணியில் இருப்பதை காட்ட ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் கவனமாக ஒட்டி வந்தார் என்றாலும் தமிழரசி தான் கவனக்குறைவாக ஓட்டி சென்று விபத்தை எற்படுத்தினார் என்றால் சரியல்ல. எனக்கும் தமிழரசிக்கும் பணி நேரம் காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை விபத்து காலை 10.50 க்கு நடந்தது என்றால் ஆமாம். எங்களுக்கு பணிக்கு செல்லவேண்டிய நேரமாகிவிட்டதால் தமிழரசி அதிவேகமாக சென்று விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. விபத்தின் போது தலைகவசம் அணியாமல் சென்றதால் தான் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து ஏற்பட்டு ஒரு மாதம் கழித்து பணிக்கு சேர்ந்தேன். எனக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயங்கள் என்றாலும் உடனடியாக பணியில் சேர்ந்து விட்டடேன் என்றாலும் சரியல்ல. தமிழரசி அரசு ஊழியர் என்பதால் 3ம் எதிர்மனுதாரர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தமிழரசி கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்பதால் நான் பயணம் செய்த இருச்சக்கர வாகனத்தின் காப்பீடு நிறுவனத்திடம் தான் நஷ்டஈடு கேட்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் மனுவை காலதாமதமாக தாக்கல் செய்து உள்ளதாலும் 3ம் எதிர்மானுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததாலும் 2ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமை பட்டவர் இல்லலை என்றாலும் சரியல்ல. எனவே 2ம் மனுதாரரை பொறுத்து மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு எலும்பு முறிவு ஏற்பட்டதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.